சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணி, 1997 – நகராட்சிப் பொறியாளர்கள் / மண்டல செயற் பொறியாளர்கள் பணியிட மாறுதல் வழங்கும் அரசுக்கு உள்ள அதிகாரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3(1)) துறை

அரசாணை (ப) எண் 503 நாள் 02.12.2008

கார்த்திகை 17,
திருவள்ளுவராண்டு 2039.
படிக்கப்பட்டது

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண் 36685/2008/எப்1, நாள் 13.8.2008.

*****

ஆணை:

நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே படிக்கப்பட்ட தனது செயற்குறிப்பில், அரசாணை(நிலை) எண் 309, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.12.1997–ல் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி விதிகள், 1997, வெளியிடப்பட்டன என்றும் மேற்படி விதிகளில் விதி 2–ன் படி நகராட்சிப் பொறியாளர் / மண்டல நகராட்சிப் பொறியாளர் பணியிடங்கள் வகை–II (category II) என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி விதிகளின் விதி 4–ன் படி இப்பணியிடங்களுக்கான நியமன அதிகாரி அரசு என்றும் மேற்படி பணியிடங்கள், அதற்கு கீழ்நிலை பணியிடமான வகை–III (Category III) அதாவது உதவி செயற் பொறியாளர்கள் பணியிடத்திலிருந்து பதவி உயர்வின் வாயிலாக நியமனம் செய்யப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாடு பொறியியல் பணி விதிகள், 1997–ன் படி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற உதவி செயற் பொறியாளர்களின் தேர்ந்த பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார். மேலும் நகராட்சிகளில், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் உட்பட முதல் நிலை நகராட்சிகளையும் சேர்த்து, மொத்தம் 28 செயற் பொறியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள் என தெரிவித்துள்ளார். மேலும், தமிழ்நாடு நகராட்சி பொது விதிகள், 1970, பகுதி–II–ல் விதி 38(i)–ல் அரசு, தமக்குள்ள ஒன்று மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரத்தினை பகிர்ந்தளிக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, நிர்வாக நடைமுறைகளை துரிதமாக மேற்கொள்ள ஏதுவாக, நகராட்சிப் பொறியாளர்களின் பணியிட மாறுதல் (posting and transfer) வழங்கும் அதிகாரத்தினை ஒப்பளிப்பு (delegation of powers) செய்யுமாறு அரசை நகராட்சி நிர்வாக ஆணையர் கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செய்ற்குறிப்பு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்விற்குப்பின், நிர்வாக நடைமுறைகளை துரிதமாக மேற்கொள்ள ஏதுவாக, நகராட்சிப் பொறியாளர்கள் / மண்டல பொறியாளர்களின் பணியிட மாறுதல்களை (postings and transfer) பிறப்பிக்கும் அரசுக்கு உள்ள அதிகாரத்தினை, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு ஒப்படைக்கலாமெனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை—5.
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை—108.
நகல் : நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4, மா.ந.5) துறை, சென்னை—9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு—2)துறை, சென்னை—9.

/உண்மை நகல்/

R [signature] 2.12.08
பிரிவு அலுவலர்